மாலை மலர்




# பால தேவி சந்திரசேகர் பரதநாட்டியம்

பரதநாட்டியக் கலைஞர் பால தேவி சந்திரசேகர், தனது நடன–நாடகப் படைப்பான 'மௌலி ஏ டைம்லெஸ் ட்ரெடிஷன்' நிகழ்ச்சியை, வருகிற ஆகஸ்டு 2–ந்தேதி (ஞாயிற்றுக்கிழமை) மாலை 6 மணிக்கு சென்னை திருவான்மியூர் பரதகலாக்ஷேத்ரா அரங்கில் நிகழ்த்தவுள்ளார். இப்படைப்பு, பந்தர்பூர் ஆன்மீக மரபு மற்றும் வர்கரி சம்பிரதாயம் ஆகியவற்றால் ஈர்க்கப்பட்டு, ஆழ்ந்த ஆராய்ச்சியுடன் உருவாக்கப்பட்ட பரதநாட்டிய நிகழ்ச்சியாகும். பக்தி, சமத்துவம், கருணை மற்றும் தாய்மை ஆகிய உலகளாவிய விழுமியங்களை இப்படைப்பு கொண்டாடுகிறது. இந்த நிகழ்ச்சிக்கு நுழைவுக் கட்டணம் இல்லை.